பக்கங்கள் 18+6

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

## சுதந்திரக் கட்சியில்
# தலைவர் பதவியை வகிக்க மைத்திரிக்கு நிரந்தரத் தடை



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைவர் பதவியை 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 11 புதன்கிழமை 24.04.2024 அதிர்வு 268



# தமிழரசுக் கட்சி வழக்கு
# மே 31 இற்கு ஒத்திவைப்பு
## 7 எதிராளிகள் மூன்று விதமான நிலைப்பாடுகளில் ஆட்சேபனை மனுக்கள் நீதிமன்றத்தில் தாக்கல்

திருகோணமலை, ஏப்ரல் 24

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் மே 31ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கின் ஏழு எதிராளிகளான கட்சியின் உத்தியோகத்தர்கள் மூன்று விதமான நிலைப்பாடுகளை எடுத்து தங்கள் ஆட்சேபனை மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

எட்டாவது எதிராளியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட இரத்தின வடிவேல் தரப்பு தமது ஆட்சேபனையைத் தாக்கல் செய்யவும், எதிராளிகளின் ஆட்சேபனை மனுக்களைப் படித்து வழக்காளி தங்கள் தரப்பு கருத்தைச் சமர்ப்பிக்கவும் கால அவகாசம் அளித்து மே 31 ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார் திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா. 04

# அகிலன் முத்துக்குமாரசாமிக்கு நீதிமன்றம் இன்று பிடியாணை



இலங்கைத் தமிழரசுக் கட்சி வழக்கில் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் பேரில் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்துக்குச் சமுகம் அளிக்க அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், நீதிமன்றத்துக்கு இன்று பிரசன்னம் தராத 'புதிய சுதந்திரன்' மின்னியல் பத்திரிகையின் வெளியீட்டாளர் அகிலன் முத்துக்குமாரசாமிக்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இன்று பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்தது.

இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விடயத்தை ஒட்டி 'புதிய சுதந்திரன்' இதழில் வெளியான செய்தி ஒன்றை வழக்கின் எதிராளிகளில் ஒருவரான எம்.ஏ. சுமந்திரன் சமர்ப்பித்து, இந்தச் செய்தி மூலம் அகிலன் முத்துக்குமாரசாமி நீதிமன்ற அவமதிப்புக் குற்றம் புரிந்திருந்தார் எனக் கடந்த தவணையின்போது வாதம் செய்திருந்தார். அதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி, மேற்படி அகிலன் முத்துக்குமாரசாமிக்கு இன்றைய தவணையின்போது நீதிமன்றத்தில் பிரசன்னமாகுமாறு அழைப்பாணை 04

### தன் மீதான துப்பாக்கிச்சூடு வழக்கு தொடர்பில்

# யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தோன்றி சாட்சியமளித்த நீதிபதி இளஞ்செழியன்!



**(எஸ்.நிதர்ஷன்)**

மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் மீது மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையில் இன்று நீதிபதி இளஞ் செழியன் நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியம் அளித்தார்.

மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் மீது நடத் தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத் தில் அவரது மெய்ப்பாதுகாவலாரான பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந் தமை மற்றும் ஒரு பொலிஸ் உத்தியோ கத்தர் காயமடைந்த சம்பவம் தொடர்பான வழக்கு இன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் சாட்சியமளிப்பதற் காக வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்கு வருகைதந்தார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதி பதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனும், காயமடைந்த பொலிஸ் உத்தியோகத் தரும் சாட்சியமளித்தனர்.

குறித்த வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் விசேட அரச சட்டவாதி நாகரத்தினம் நிசாந்தும், எதி ராளிகள் சார்பில் சட்டத்தரணி பிரதீபன் சர்மினியும் ஆஜராகினர்.

மேற்படி வழக்கு விசாரணை தொடர்ச்சியாக மூன்று தினங்களுக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

# பாடசாலைகளுக்கு மே 3 ஆம் திகதி மீண்டும் விடுமுறை!




தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் இன்று ஆரம்பமானது.

கடந்த 10ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டிருந்தது.

இதனிடையே, பாடசாலைகளுக்கு எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை மீண்டும் விடுமுறை வழங்கப் படவுள்ளது.

இந்தக் காலப்பகுதிக்குள் 2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை நடத்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மே 6 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் எனவும், 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சாத்திகள் பரீட் சைக்குத் தோற்றவுள்ளனர் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் இருந்து 3 இலட் சத்து 87 ஆயிரத்து 648 விண்ணப் பங்களும், தனியாரிடமிருந்து 65 ஆயிரத்து 331 விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. 3 ஆயிரத்து 521 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும்.

# ஜனாதிபதியாக ரணில் தொடர்ந்து இருக்க ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்க வேண்டும்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



( வாஸ் கூஞ்ஞ)

ஜனாதிபதியாக ரணில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று அன்று அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டன. இப்பொழுதும் இந்த நிலையே முன்னெடுக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்த நாமும் அனைவரையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

தொழில் மற்றும் வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார்.

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சால் வழங்கப்படும் அனைத்து சேவைகளும் அனைத்து கிராமங்கள் தோறும் உள்ள மக்களுக்கும் கிடைக்கப்பெறுவதற்கான நடமாடும் சேவை மன்னாரில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி பிரதிநிதிகளை அமைச்சர் மனுஷ நாணயக்கார சந்தித்த போது அவர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

நாடு இக்கட்டான நிலையில் இருந்த பொழுது எமது ஜனாதிபதி பொறுப்பேற்று முன்னேற்றத்துக்கு இட்டுச் செல்லும் நேரத்தில் மன்னார் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் நாம் ஒன்று கூடியுள்ளோம்.

எமது ஜனாதிபதி நாட்டில் உள்ள யாவரையும் ஒரே எண்ணக் கருவிலேயே நோக்கி வருகின்றார். ஜனாதிபதி நாட்டிலுள்ள இனப் பிரச்சினைகளை முற்றாக அழிக்க வேண்டும். அத்துடன் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கிலேயே செயல்பட்டு வருகின்றார்.

ஜனாதிபதி மக்கள் தெரிவில் ஆட்சிப்பீடம் ஏறவில்லை. மாறாக இந்த நாட்டை கட்டியெழுப்ப பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டபோதும் யாரும் முன்வராத நிலையிலேயே அதைப் பொறுப்பேற்று ஆட்சிபீடம் ஏறினார். இதற்கு நாம் யாவரும் ஒன்றுபட்டு அவருடன் செயற்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

பாதாளத்தில் விழுந்த இந்த நாட்டை இரண்டு வருடங்களுக்குள் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வந்த பெருமை எமது ஜனாதிபதியையே சாரும்.

இந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து இருந்தால் மட்டுமே இந்த நாட்டை தொடர்ந்து கடடியெழுப்ப முடியும் என்பது உங்கள் கருத்திலிருந்து தெரிய வருகின்றது.

அன்று இவரைத் தூற்றியர்கள் இன்று பொது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவே இருக்க வேண்டும் என தெரிவித்து நிற்கின்றனர்.

ஜனாதிபதியாக ரணில் இருக்க வேண்டும் என்று அன்று அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டன. இப்பொழுதும் இந்த நிலையே முன்னெடுக்கப்படுகின்றது.

இது எவ்வாறு இருக்கும் போதும் நமது கட்சியைப் பொறுத்தமட்டில் நாம் என்ன செய்ய வேண்டும் என்ற சிந்தனை எம்மில் இருக்க வேண்டும்.

எமது கட்சியைப் பொறுத்த மட்டில் வடக்கு மாகாணத்துக்குப் பொறுப்பாக ரவி கருணாநாயக்க, நுவரெலியா மாவட்டத்துக்கு நான் பொறுப்பாக இருக்கின்றேன். இவ்வாறு பலருக்கு பொறுப்பை பகிர்ந்தளித்துள்ளார்.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்திலும் உங்களுக்கும் பொறுப்புக்களை பகிர்தளித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டும் எமது ஜனாதிபதியை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வர முடியாது. மாறாக நாம் ஏனைய கட்சிகளுடனும் இணைந்து ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும்.

இக்கட்டான நிலைக்கு நமது நாடு சென்றபோது ஜனாதிபதி எவ்வாறு ஏற்றுக் கொண்டு செயற்பட்டு நாட்டை தற்பொழுது ஒரு சுபீட்சமான நிலைக்கு கொண்டு வந்துள்ளார் என்பமை நீங்கள் அறிவீர்கள்.

ஆகவே நீங்கள் இதை உங்கள் பகுதிகளிலுள்ள மக்களுக்கு விளங்கப்படுத்தி எல்லோரையும் ஒரே குடையின் கீழ் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்

மன்னார் மாவட்டம் இலங்கையில் ஒரு முக்கியமான இடம். ஆகவே மன்னார் மாவட்டத்தை நாம் கடந்த காலத்தைப் போன்று ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வர வேண்டும்.

நானும் மன்னாரை இரண்டு தினங்களாக நன்கு அறிந்து வைத்திருக்கின்றேன். நான் ஜனாதிபதியை சந்திக்கும்போது மன்னாரைப்பற்றி எடுத்துரைப்பேன்.- என்றார்.

# நிலைபேறான வீட்டுத் தோட்ட வேலை திட்டம் செட்டிக்குளத்தில்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

விவசாய அமைச்சால் முன்னெடுக்கப்படும் நிலைபேறான வீட்டுத் தோட்ட வேலை திட்டத்தின் மூலம் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடுதல் ஆரம்ப நிகழ்வு கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் பங்கேற்போடு செட்டிகுளம் கமநல சேவைகள் நிலையத்தில் இடம் பெற்றது.

இதன்போது பயனாளிகளுக்கான வீட்டுத் தோட்ட விதைகள் மற்றும் மரக் கன்றுகளை இராஜாங்க அமைச்சர் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

# நாள் சம்பளம் ரூ.1,700 இழுபறியில்! இன்றைய சந்திப்பிலும் ஏமாற்றம்!!

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பில் இன்று நடைபெற்ற சம்பள நிர்ணய சபைக் கூட்டமும் எவ்வித முடிவும் எட்டப்படாமல் முடிவடைந்துள்ளது.

இன்றைய கூட்டத்திலும் முதலாளிமார் சம்மேளனம் பங்கேற்கவில்லை என்று சம்பள நிர்ணய சபைக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

சம்பள நிர்ணய சபை தொழில் ஆணையாளர் தலைமையில் கொழும்பில் இன்று கூடியது.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தாலும், முதலாளிமார் சம்மேளனம் கூட்டத்தைப் புறக்கணித்தது என்று நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற சம்பள நிர்ணய சபைக் கூட்டத்திலும் முதலாளிமார் சம்மேளனம் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1,700 ரூபா வழங்கப்பட வேண்டும் என யோசனை முன்மொழியப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழரசுக் கட்சி...

கட்சி யாப்புக்கு முரணாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும், பொதுக்குழு வாக்களிப்பில் கடைசியாக 20 பேர் வரை சேர்க்கப்பட்டமை மாத்திரமே நேர்ந்த தவறு என்றும், ஆனால் அது கூட தலைவர் தெரிவின் முடிவை மாற்றவில்லை என்ற சாரப்படவும் தெரிவித்து ஆறாவது எதிராளியான சுமந்திரன் தமது ஆட்சேபனை மனுவை கடந்த தவணையின் போதே தாக்கல் செய்திருந்தார் என்பது தெரிந்ததே.

அதுவே கட்சியின் அரசியல் குழுவின் நிலைப்பாடு என்று தெரிவித்து, அதே சாரப்பட்ட ஆட்சேபனையை கட்சியின் பதில் பொதுச்செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், நிர்வாகச் செயலாளர் குலநாயகம் ஆகியோர் அவர்களின் சட்டத்தரணிகள் மூலம் இன்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் வழக்காளியின் பல கோரிக்கைகளை ஏற்க மறுத்த அதேசமயம், நீதிமன்றத்தில் இவ்வழக்கையொட்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ள கட்சியின் யாப்பு அல்லாத பிறிதொன்றை யாப்பாகக் காட்டி அதன் அடிப்படையில் கட்சியின் கூட்டங்கள் ஒழுங்காகவே கூட்டப்பட்டிருக்கின்றன, முறையாகவே நடந்திருக்கின்றன என்ற அடிப்படையில் ஆட்சேபனையைச் சமர்ப்பித்தனர்.

சிறிதரன், குகதாசன் ஆகிய எதிராளிகளின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தாங்கள் வழக்காளி சமர்ப்பித்த எல்லா விடயங்களையும் ஏற்று, அங்கீகரித்து, அதன் அடிப்படையில் வழக்கைத் தீர்க்க விரும்புகின்றனர் என்ற கருத்தில் தங்கள் ஆட்சேபனை மனுவை சமர்ப்பித்திருக்கின்றனர் என்று தெரிவித்தார்.

ஆறாவது எதிராளியான சுமந்திரன் கட்சியின் அரசியல் குழு எடுத்த தீர்மானம் அல்லது வழிகாட்டல் படி ஆட்சேபனை மனுவைத் தாக்கல் செய்தாலும், கட்சியில் கொள்கை ரீதியான இத்தகைய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் மத்திய குழுவுக்கு உண்டு என்றும் கே.வி. தவராசா குறிப்பிட்டார்.

இதேசமயம் இந்த வழக்கின் இடையீட்டு எதிராளியாக வர விண்ணப்பித்துள்ள இரத்தினவடிவேலின் மனுவை வழக்காளியோ ஏனைய எதிராளிகளோ ஆட்சேபிக்காத நிலையில் அவரை எட்டாவது எதிராளியாகச் சேர்க்கவும், அதற்கேற்ப வழக்குப் பதிவுகளை மாற்றவும் நீதிபதி அனுமதி அளித்தார்.

எட்டாவது எதிராளியின் ஆட்சேபனை மற்றும் வழக்காளியின் கருத்துரை ஆகிய வற்றுக்காக வழக்கு மே 31ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதால் அந்தத் திகதியிலும் வழக்கின் விசாரணை ஆரம்பமாகாது என்றே கருதப்படுகின்றது.

### தலைவர்...

வகிக்க நிரந்தரத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட பிரதான நீதிமன்றத்தால் இன்று குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மொன்டேகு சரத் சந்திர தாக்கல் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் கொழும்பு மாவட்ட பிரதான நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

### அகிலன்...

வழங்கக் கட்டளையிட்டார்.

இன்று வழக்கு மன்றில் எடுக்கப்பட்டபோது அகிலன் முத்துக்குமாரசாமி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ஒருவர், தமிழரசுக் கட்சிக்கு எதிரான இந்த வழக்கில் தன்னையும் இடையீட்டு எதிராளியாகச் சேர்த்துக்கொள்ள அகிலன் முத்துக்குமாரசாமி விண்ணப்பித்துள்ளார் என்று தெரிவித்து விண்ணப்பத்தையும் சமர்ப்பித்தார்.

அப்போது எங்கே அகிலன் முத்துக்குமாரசாமி, அவர் நீதிமன்றத்தில் பிரசன்னமாகவில்லையே, அவருக்கு நீதிமன்றத்தில் பிரசன்னமாக அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதே என்று கேட்கப்பட்டது.

அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, அகிலன் முத்துக்குமாரசாமிக்கு நீதிமன்ற அழைப்பாணை ஏதும் கிடைக்கவில்லை, அதனால் அவர் மன்றுக்கு சமுகம் தரவில்லை என்றார்.

அந்தச் சமயத்தில் ஆறாவது எதிராளியான சுமந்திரன் குறுக்கிட்டு வாதம் செய்தார்.

"அகிலன் முத்துக்குமாரசாமி மீது நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. அதை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்காக அவருக்கு அன்றைய தவணையிலேயே பிடிவிறாந்து பிறப்பித்திருக்க முடியும். ஆனால், அதைச் செய்யாமல் அழைப்பாணை மட்டுமே அனுப்ப கடந்த தவணை நான் கோரியிருந்தேன். அப்படித் தமக்கு திருகோணமலை நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது என்பதை அகிலன் தமது மின்னியல் பத்திரிகையில் செய்தியாகப் பிரசுரித்துள்ளார். அழைப்பாணை அவரது கைகளுக்குக் கிடைக்காவிட்டாலும், அப்படி நீதிமன்றத்தால் தமக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருப்பது அவருக்குத் தெரிந்தேயிருக்கிறது. ஆனால், அவர் நீதிமன்றத்துக்குச் சமுகம் தரவில்லை. ஆகவே, அவருக்கு பிடிவிறாந்து கொடுக்க இப்போது கோருகின்றேன்." – என்றார் சுமந்திரன்.

"வழக்கமாகக் கட்சிக்காரர் யார் இந்த வழக்கில் இடையீட்டு எதிராளியாக நுழைய முயற்சித்தாலும் நான் அதை ஆட்சேபிக்க மாட்டேன். அது அவர்களின் உரிமை. அகிலன் முத்துக்குமாரசாமி விடயத்திலும் அதுதான் எனது நிலைப்பாடு. ஆயினும், இந்த வழக்கில் அவருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு விடயம் விசாரித்து முடியும் வரை, அவரது இடையீட்டு எதிராளி நுழைவுக்கான விண்ணப்பத்தை நிறுத்தி வைக்கக் கோருகின்றேன்." – என்று சுமந்திரன் குறிப்பிட்டார்.

அதை நீதிமன்றம் ஏற்றுப் பிடியாணை பிறப்பிக்க உத்தரவிட்டது. அதை நிறைவேற்றும் பொறுப்பு சாவகச்சேரி நீதிமன்ற பிஸ்கால் அலுவலருக்கு வழங்கப்பட்டது.

அச்சமயம் குறிப்பிட்ட சுமந்திரன், "அத்தகைய பிடியாணையை நீதிமன்ற அலுவலர் நிறைவேற்றும்போது நீதிமன்றத்தின் முன் அனுமதி பெற்றிருந்தால், அந்த அனுமதியின் அடிப்படையில், அந்த நபரைக் கைது செய்து, பின் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளின் அடிப்படையில் அந்த அதிகாரியே பிணையிலும் விடுவிக்க முடியும். அந்த அடிப்படையில் அகிலன் முத்துக்குமாரசாமியை நீதிமன்ற அலுவலர் கைது செய்தாலும், உடனடியாகப் பிணை வழங்க அனுமதிக்க வேண்டும்." – என்று கோரினார்.

அவரது கோரிக்கையை ஏற்ற நீதிமன்றம், ஒரு இலட்சம் ரூபா சொந்தப் பிணையிலும் மற்றும் இரண்டு பேரின் உறுதிப் பிணையிலும், அடுத்த தவணை வழக்குக்கு நீதிமன்றத்தில் பிரசன்னமாவார் என்ற உறுதியுடன் அவரை உடன் விடுவிக்க அனுமதியும் வழங்கியது.





# கருத்தியல் ரீதியான மோதல்களுக்கு தனிப்பட்ட தாக்குதல் அநாகரீகமானது!

## கண்டி மாவட்ட எம்.பி. வேலுகுமார் மீதான தாக்குதல் முயற்சிக்கு திகாம்பரம் கண்டனம்



**(மஸ்கெலியா)**

கருத்தியல் ரீதியான மோதல்களுக்குத் தனிப்பட்ட முறையில் தாக்குதல் நடத்த முயற்சிப்பது நாகரிகமான அரசியல் செயற்பாடாக இருக்காது.

அந்த வகையில் கண்டி மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் மீது தாக்குதல் நடத்த முயற்சித்து, மோசமான வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் சமூகத்தை தலைக்குனியச் செய்ததை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணி பிரதித் தலைவருமான பழனி திகாம்பரம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாடாமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தமது அறிக்கையில் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசியல் ரீதியில் கருத்து முரண்பாடுகள் ஏற்படுவது சகஜமான விடயமாகும். கண்டனங்களையும் விமர்சனங்களையும் அந்தந்த வழியிலேயே எதிர்கொள்ள வேண்டும். அதை விடுத்து தாக்குதல் முயற்சிகளை மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது.

சம்பள உயர்வு தொடர்பான விடயத்தில் சகலரது ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அவ்வாறில்லாமல் அடாவடித்தனங்களால் எதையும் சாதிக்க முடியாது. மக்களின் வெறுப்புக்குத் தான் ஆளாக வேண்டியிருக்கும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

மலையகத்தில் ஒரு காலத்தில் அடிதடி, பழிக்குப் பழி, என்று மக்களைத் தூண்டி விட்டு தொழிற்சங்கம் மற்றும் அரசியல் நடத்திய வன்முறை கலாசாரம் இருந்து வந்தது.

அரசியல் ரீதியில் தவிர்க்க முடியாத ஒன்றாகவும் இருந்து வந்தது. ஆனால், இன்று அந்தக் கலாசாரம் மலையேறி விட்டது. கடந்த சில வருடங்களாக எந்த விதமான குரோதங்களும் இல்லாமல் சுமுகமான நிலை காணப்படுகின்றது.

தொழிலாளர்கள் மத்தியில் பிளவுகள் ஏற்பட்டு நீதிமன்றம்வரை சென்ற வழக்குகள் வருடக் கணக்கில் நிலுவையில் கிடப்பதால் அப்பாவி மக்கள் நிம்மதியின்றி இன்றும் அலைந்து திரிந்த வண்ணம் இருக்கின்றார்கள்.

அதேபோல், மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டு செல்ல சிலர் அராஜக அரசியலை கட்டவிழ்த்து விட்டு குளிர்காய நினைக்கின்றார்கள். பிரச்சினைகளுக்கு வன்முறைகள்தான் தீர்வாக அமையும் என்று நினைக்கக் கூடாது. ஒருவர் அடிக்கும் போது மற்றவரும் திருப்பி அடித்தால் நிலைமை மோசமாகி விடும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நீண்ட காலமாக நிலவிவந்த அரசியல் போட்டா போட்டிகள் மாறி மலையகம் அமைதியாக இருக்கின்ற நேரத்தில் மீண்டும் மக்கள் மத்தியில் பிளவுகளை உண்டாக்கிக் குழப்பங்களை ஏற்படுத்தவும், ஒற்றுமையைச் சிதறடித்து, அமைதியை சீர் குலைக்கவும் சிலர் மேற்கொள்ளும் முயற்சிகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

இத்தகைய வன்முறைகள் மேலும் தொடர்வதற்கு இடமளிக்கக்கூடாது. மலையகத் தலைமைகள் தமது அங்கத்தவர்களை கட்டுப்பாடாக வைத்து கடமை கண்ணியத்தைப் பேணி நிதானமாக செயற்படுவதற்கு அக்கறை காட்ட வேண்டும் .– என்றுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மைத்திரி தரப்பு சிக்கலில்

சர்ச்சைகளுக்குள்ளும் சிக்கல்களுக்குள்ளும் மாட்டுபட்டிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இதுவரை அதன் தலைவராக இருந்த மைத்திரிபால சிறிசேன பிரிவினருக்கு நெருக்கடி உச்சமாகத்தான் இருக்கும் என்று தோன்றுகின்றது.

ஏற்கனவே அதன் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக கட்சியின் முன்னாள் தலைவரும் மற்றொரு முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க தொடுத்த வழக்கில், மைத்திரிபால சிறிசேன கட்சியின் தவிசாளராகச் செயல்படுவதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவு 14 நாள்களுக்கு ஒரு தடவை வழக்கு எடுக்கப்படும் தவணைகளின் போது நீடிக்கப்படும் விதத்தில் வழங்கப்பட்டிருந்தது.

இன்று, இதே போல இன்னொரு மனுதாரராக சு.கவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மொண்டேகு சரத்சந்திர சமர்ப்பித்த மனுவை விசாரணை செய்த கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அந்த வழக்கின் விசாரணை முடியும் வரை தவிசாளர் பதவியில் மைத்திரிபால சிறிசேன தொடர்வதற்கு நிரந்தரத் தடை உத்தரவு வழங்கியிருக்கிறது.

எனவே சுதந்திரக் கட்சியின் தலைவராக மைத்திரிபால சிறிசேன கடமையாற்றுவதற்கு இப்போதைய கட்டத்தில் வாய்ப்புக் கிட்டாது என்றே தோன்றுகின்றது. இரண்டு வழக்குகளினதும் - சந்திரிகா தாக்கல் செய்த வழக்கினதும், மொண்டேகு சரத்சந்திர தாக்கல் செய்த வழக்கினதும் - முடிவுகள் வரும் வரை மைத்திரிபால சிறிசேன காத்திருக்க வேண்டும் என்பதுதான் நிலைமை.

அதேசமயம் அவரது அணியினரால் பதில் தலைவர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கும் சிக்கல்கள் இருப்பதாகவே தெரிகின்றது.

ஏற்கனவே சு.கவின் தலைமையிலான உத்தேச கூட்டணி சார்பில் வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் வேட்பாளராகக் களமிறங்குவது பற்றி சிந்திக்கிறார் என்று விஜயதாஸ ராஜபக்ஷ அறிவித்திருக்கின்றமையாக் பெரும் கடுப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளார் என்று கூறப்படுகின்றது.

தமக்கு எதிராகத் தேர்தலில் களமிறங்க இருப்பவரை, தமது அமைச்சரவையில் வைத்திருப்பதா என்ற கேள்வி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

சு.கவின் தலைவராக இருந்த மைத்திரிபால சிறிசேன பல வழக்குகளில் சிக்குப்பட்டு நீதிமன்ற விசாரணைகளையும், நெருக்கடிகளையும் எதிர்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் நீதித்துறைக்கு பொறுப்பான அமைச்சராக இருந்து கொண்டு விஜயதாஸ ராஜபக்ஷ, அவருடன் போய் ஒட்டிக்கொள்வது தார்மீகமா என்று கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

இந்தக் காரணத்தை முன்னிறுத்தியே விஜயதாஸ ராஜபக்ஷவின் அமைச்சர் பதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒட்டவெட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இதற்கிடையில் -

மறுபுறத்தில் விஜயதாஸ ராஜபக்ஷவை எம்.பி. பதவியில் இருந்தே அகற்றுவதற்கான நடவடிக்கைகள் கூட எடுக்கப்படலாம் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

அவர் நேற்று வரை சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்தவர். நேரடியாக அந்தக் கட்சியின் எம்.பியாக தான் நாடாளுமன்றத்துக்கு தெரிவானவர். இப்போது திடீரென சுதந்திரக் கட்சியின் பதில் தலைவர் தாம் என்கின்றார்.

இன்னொரு கட்சியில் அவர் உறுப்பினரானால், மொட்டுக் கட்சி உறுப்புரிமையை அவர் தானாகவே இழந்தவராகி விடுகின்றார் என்பதை மொட்டுக்கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் சுட்டிக்காட்டுகிறார்.

"இது குறித்து விஜயதாஸ ராஜபக்ஷ விடம் விளக்கம் கோரப்படும். அவர் சு.கவின் உறுப்பினராகிவிட்டார் என்பது உறுதியானால், அவர் மொட்டுக் கட்சியின் உறுப்புரிமையையும் அதன் மூலம் எம்.பி. பதவியையும் உடனடியாகவே இழக்க வேண்டியவராவார்" - என்று கூறுகிறார் காரியவசம்.

வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் விஜயதாஸ ராஜபக்ஷவை எம்.பி. பதவியில் இருந்து அகற்றும் முயற்சியில் மொட்டுக்கட்சி வெற்றி பெறுமா, அல்லது அது வழக்குத் தவணை என்று இழுபடுமா என்பவற்றையெல்லாம் இப்போது கூற முடியாது.

விஜயதாஸ ராஜபக்ஷவுக்குகு எதிராக மொட்டுக்கட்சி எடுக்கும் ஒழுங்கு நடவடிக்கைச் செயற்பாட்டின் செயற்றிறனைப் பொறுத்தது அந்த விடயம்.

எது,எப்படி என்றாலும், இப்போதைய சர்ச்சையில் மைத்திரி தரப்பு சற்று கூடிய நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது என்பது தெளிவு.

# வடக்கு சுகாதாரப் பணிப்பாளராக பத்திரண இன்று யாழில் பதவி ஏற்பு









வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக விதான பத்திரணஹாலகே சமன் தர்மசிறீ பத்திரண இன்றையதினம் சம்பிர தாயபூர்வமாக கடமைகளை பொறுப் பேற்றார்.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகா தார பணிமனையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக இருந்த, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத் தியமூர்த்தி தனது பொறுப்புக்களை புதிய பணிப்பாளர் பத்திரணவிடம் கையளித்தார்.

இதன்போது வடக்கு மாகாண சுகா தார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கே.நந்தகுமாரன் உள்ளிட்ட சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



# மாடு குறுக்கே பாய்ந்ததால் குடைசாய்ந்த கனரக வாகனம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அட்டாளைச்சேனை மீனோடைக் கட்டு பிரதேசத்தில் கனரக வாகன மொன்று பாலத்துக்கு அருகில் குடைசாய்ந்துள்ளது.

வேகமாக வந்த கனரகவாகனம், வீதியில் திடீரென மாடு ஒன்று குறுக் கிட்டதால் குடைசாய்ந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனத்தில் பயணித்தவர்கள் சிறு காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# நான்கு குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்பு உதவி!




( ஹஸ்பர்)

பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருவாய் தரும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கோடு திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கமானது நான்கு குடும்பங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் தூவல் நீர் பாசனக் கருவிகளை நேற்று (23 ) வழங்கியது.

இந்த உபகரணங்களை நலன்புரி சங்கத்தின் தலைவர் ச.குகதாசன் கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இவ்வாறான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## சத்திய சோதனை நாடகம் வெள்ளியன்று மாலை திருமறைக் கலாமன்றத்தில்

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் தயாரிப்பில் பேராசிரியர் சி.ஜெய்சங்கரின் நெறியாள்கையில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'சத்திய சோதனை' என்னும் நாடகம் நாளை மறுதினம் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

நடைமுறைக் கல்வி பற்றிய கேள்வியையும் பொருத்தமான கல்வி முறையின் தேவை பற்றியும் உரையாடலைத் தூண்டும் நாடகமாக இது அமைந்துள்ளது.

நாடக ஆற்றுகையைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.



## போதைப்பொருளுடன் கைதான கணக்காளருக்கு விளக்கமறியல்!

(பாறுக் ஷிஹான்)

நீண்ட காலமாக போதைப் பொருள் விநியோகம் மற்றும் பயன்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் கைதான சந்தேக நபரான கணக்காளரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இந்தச் சந்தேக நபரை பொலிஸார் நேற்று (23) நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சந்தேக நபரான கணக்காளர் நீண்ட காலமாகப் போதைப் பொருள் விநியோகம் மற்றும் பயன்பாட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் மருதமுனை பகுதியில் வைத்து பெரிய நீலாவணை பொலிஸாரால் திங்கட்கிழமை (22) இரவு கைது செய்யப்பட்டிருந்தார்.

அண்மையில் மருதமுனை நகரை அண்டிய பகுதியில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் கைதான சந்தேக நபரின் வாக்கு மூலத்தை அடிப்படையாக கொண்டு பெரிய நீலாவணை பொலிஸார இந்தக் கணக்காளரைக் கைது செய்யத் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது கணக்காளர் வசம் இருந்து ஐஸ் போதைப் பொருள் 840 மில்லி கிராம், கேரளா கஞ்சா 4 கிராமும் 540 மில்லி கிராமும் மீட்கப்பட்டிருந்தன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 39 வயது மதிக்கத்தக்க சந்தேக நபரான கணக்காளரிடம் மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஊடகவியலாளர் ஜெகனின் நூல் வெளியீடு!










**(மன்னார் நிருபர்)**

மன்னார் ஊடகவியலாளர் எஸ். ஜெகன் எழுதிய “மகா வம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும் சங்க இலக்கிய நூல்கள் மூலமாக இடப் பெயராய்வு நூல் வெளியீடு நேற்று (23) இடம்பெற்றது.

மன்னார் றோட்டரி கழகத்தின் நிதி அனுசரணையில் மன்னார் றோட்டரி கழகத்தின் தலைவர் பொறியியலாளர் றொபேட் பீரிஸ் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெய்க்கா மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினரான மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகர பிரதேச செயலாளர் ம.பிரதீப், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கே. அரவிந்தராஜ் , மடு பிரதேச செயலாளர் கீதபொன்கலன் நிஜாகரன், மன்னார் சட்டத்தரணி செல்வராஜா டினேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நூலானது மகா வம்ச விஜயனும் 700 தோழர்களும் இலங்கையில் வந்து இறங்கிய இடமானது மன்னார் கட்டுக்கரை பிரதேசம் என்பதை சங்க கால இலக்கிய நூல்களான கம்பராமாயணம், தொல்காப்பியம் உட்பட மகா வம்ச நூல்களின் ஆதாரத்தோடும் தற்கால வரலாற்று ஆசிரியர்கள் வெளியீடு செய்த நூல்களின் துணையோடு கூறப்பட்டுள்ளது.

இந்த கட்டுக்கரை பிரதேசத்தின் தோற்றம், வளர்ச்சி அதன் சிறப்பு குன்றியதற்கான காரணங்களை கம்பராமாயணம், மகா வம்ச நூல்கள் கூறும் இடப்பெயர்களையும் தற்போது மன்னார் மாவட்டத்தில் காணப்படும் இடம்பெயர்வுகளையும் ஒப்பிட்டு ஆய்வு நூலாக இது வெளிவந்துள்ளது.

இந்த நூல் ஆய்வை மன்னார் கல்வி வலய ஆசிரிய ஆலோசாக் சந்திரலிங்கம் ரமேஷ் வழங்கியிருந்தார்.

# மட்டக்களப்பில் தொழில் வழிகாட்டல் பயிற்சி



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்வி அமைச்சரின் புதிய சிந்தனையில், கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை எழுதி பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கான மூன்றாம் நிலை கல்வியை மேம்படுத்தல் நிகழ்சித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுத்துச் செல்லப்படும் தொழில் வழிகாட்டல் பயிற்சி மட்டக்களப்பு தொழில் நுட்பக் கல்லூரியில் அதிபர் சோமசூரியம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதன் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பினதங்கிய முனைக்காடு, முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு போன்ற பிரதேச பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# மட்டு. இந்துவின் உள்ளக வீதிகளுக்கான கொங்கிறீட் இடும் பணிகள் ஆரம்பமாகின!





(பழுவூரான்)

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனால் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 10 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மட்டக்களப்பு கல்வி வலையத்துக்கு உட்பட்ட இந்துக் கல்லூரியின் வளாகத்தில் 155 மீற்றர் நீளமான உள்ளக வீதிகளுக்கான கொங்கிறீட் இடும் பணிகள் ஆரதம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூபாளப்பிள்ளை பிரசாந்தன் வேலைகளை ஆரம்பித்து வைத்தார்.

பாடசாலையின் வளாகம் ஆனது பருவமழை காலங்களில் நீர் நிரம்பி நிற்பதன் காரணமாக நுளம்பு பெருக்கம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகிறது. அத்துடன் பாடசாலை மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வந்தனர்.

இது தொடர்பில் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு சென்ற நிலையில் கிராமிய வீதிகளில் இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு கீழ் இந்து கல்லூரி உள்ளக வீதிகள் செப்பனிடப்படுகின்றன.

நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதி செயலாளர் (நிர்வாகம்) வைரமுத்து பஞ்சலிங்கம், இளைஞரணிச் செயலாளர் சண்முகலிங்கம் சுரேஷ்குமார், பிரதேச குழு உறுப்பினரும் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளருமான மரியநேசம் திவாகர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், விடுதலைப் புலிகள் கட்சியின் கிராமிய குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# வீதியோரங்களில் திண்மக் கழிவுகள் நடவடிக்கை எடுக்கக் கோரும் மக்கள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அதிக எண்ணிக்கையில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் சஞ்சரிக்கும் பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் சர்வோதயபுரத்தின் வீதியோரங்களில் திண்மக் கழிவுகள் நிறைந்து காணப்படுகிறது.

இதனை உட்கொள்வதற்காக இந்தப் பிரதேசத்துக்குள் நுழையும் யானைகள் இப்பிரதேச மக்களின் பயன்தரும் மரங்களையும் உடமைகளையும் சேதமாக்கி வருகின்றன.

அத்துடன் இந்தப் பகுதியின் சுற்றுச் சூழலும் பாதிக்கப்படுகிறது.

எனவே இது குறித்துப் பொத்துவில் பிரதேச சபையின் திண்மக் கழிவு முகாமைத்துவம் கவனத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதுமட்டுமன்றி சுகாதாரத்துக்குக் கேடான இந்தச் செயற்பாட்டுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளைச் சுகாதாரத் துறையினர் மேற்கொள்ள வேண்டும் என்று பிரதேசவாசிகள் கேட்டுள்ளனர்.

ஹோட்டல்கள் நடத்தும் சிலரின் முறையற்ற செயற்பாடே இதற்குக் காரணம் என்றும் தெரிவித்துள்ளனர்.





# இன்று பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் மகா சமாதி "ஆராதனா மஹோற்சவம்"

கொழும்பு கொட்டாஞ்சேனை புதுச் செட்டித் தெரு, சாயி பாபா மத்ய நிலையத்தில்,ஒழுங்கு செய்யப்பட்ட பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபாவின் மகா சமாதி தினமான "ஆராதனா மஹோற்சவம்" இன்று புதன்கிழமை காலை நிலையத்தில் தலைவர் எஸ். என். உதயநாயகம் தலைமையில் பக்தி பூர்வமாக நடைபெற்றது. வைபவத்தில் ஓங்காரம் – சுப்ரபாதம், நகர சங்கீர்த்தனத்தை அடுத்து, தலைவர் பிரசாந்தி கொடியை ஏற்றி வைக்கின்றமையையும், மகா ருத்ர யாகத்தில் வைக்கப்பட்ட கும்பம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டுவதையும், ஐம்பொன் திருவுருவத்துக்க தொண்டர் அணியினர் பால் அபிஷேகம் செய்தபின் குருக்கள் கும்பாபிஷேகம் செய்வதையும் காணலாம்.

(படப்பிடிப்பு எஸ். எம். எஸ்)

















# காரைதீவு பாடசாலைகளில் டெங்கு நுளம்பு பரிசோதனை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா பஷீரின் ஆலோசனைக்கு அமைய காரைதீவு பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலைகள், அரச நிறுவனங்களில் டெங்கு பரிசோதனை மேற்கொள்ளபட்டது.

இதில் பொதுச் சுதார பரிசோதகர்கள், நுளம்பு கட்டுப்பாட்டு கள உத்தியோகதர்கள் கலந்து கொண்டனர். இதன்போது குறைபாடுகள் இனம் காணப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

# கல்முனை சுகாதாரப் பணிமனையில் பண்டிகைக்கால நிகழ்வு முன்னெடுப்பு







(றியாஸ் ஆதம்)

ஈஸ்டர், நோன்புப் பெருநாள் மற்றும் சித்திரைப் புத்தாண்டு ஆகிய பண்டிகைகளை சிறப்பிக்கும் வகையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் நலன் புரிச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "தித்திக்கும் திருவிழாக்கள்" நிகழ்வு திங்கட்கிழமை பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஈஸ்டர், நோன்புப் பெருநாள் மற்றும் சித்திரைப் புத்தாண்டு தொடர்பில் பிராந்திய பணிப்பாளர் சிறப்புரையாற்றியதுடன் பலூன் உடைத்தல், யோகட் சாப்பிடுதல், சங்கீத கதிரை, பூனைக்கு மணி கட்டுதல், பாடல் உள்ளிட்ட பல்வேறு கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.



# ஐ.நாவும் சர்வதேசமும் தடுக்க தவறிய ருவாண்டா - தமிழ் இனப்படுகொலை!

- நவீனன் -

ருவாண்டா இனப் படுகொலையை 1994இல் தடுக்கத் தவறியமைக்குக் காரணம் அதனைப்பற்றி மேற்குலக நாடுகள் அறியாமல் இருந்தது என்பதல்ல, மாறாக மேற்குல நாடுகளின் அரசியல் நிலைப்பாடுகளே காரணமாகும். இந்த நிலமையே 2009 இல் வன்னியில் தமிழ் மக்களின் மீதான இனப்படுகொலை அரங்கேறிய வேளையில் சர்வதேசம் மௌனம் காத்தது.

### ருவாண்டா- தமிழ் இனப்படுகொலை

உண்மையில் ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது சர்வதேச சக்திகளோ ருவாண்டா இனவழிப்பை நிறுத்தவில்லை. ருவாண்டா மக்களின் விடுதலை இயக்கமான ருவண்டா தேசிய முண்ணனியே (Rwandan Patriotic Front) அந்த இன அழிப்பை நிறுத்தியது என்பதே வரலாற்று உண்மையாகும்.

தமிழ் இனவழிப்புக்குச் சர்வதேச சக்திகள் பல உடந்தையாக இருந்தமையால், தமிழ் ஈழப் போராட்டம் மௌனித்திருக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது. இச் சந்தர்ப்பத்தில் தமிழினப் படுகொலைக்கு உள்ளான ஈழத்தமிழர்கள் முள்ளிவாய்க்கால் இன வழிப்பை, ருவாண்டா இனப்படுகொலையுடன் ஒப்பிடுவது தவிர்க்க முடியாதது.

1994இல் ருவாண்டா இனவழிப்பை தடுத்து நிறுத்தாதது போன்று தமிழ் இனவழிப்பையையும் தடுத்து நிறுத்தாமைக்குக் காரணம் தமிழினப் படுகொலையை அவர்கள் அறியாமல் இருந்தது என்பது அல்ல மாறாக அந்த நாடுகளின் அரசியல் நிலைப்பாடே காரணம் ஆகும்.

அத்துடன் இலங்கை தனது தமிழ் இனவழிப்புக்கு “பயங்கரவாதத்துக்கு எதிரான போர்” என முலாம் பூசியபோது சர்வதேச சக்திகள் இந்தப் பொய்யை ஏற்றுக் கொண்டதுடன், இலங்கையின் தமிழ் இனவழிப்புக்கு ஆயுதங்களையும் வழங்கியது. சர்வதேச சக்திகளின் இந்த நடவடிக்கை தமிழ் இனவழிப்புக்கு அந்தச் சக்திகளும் உடந்தையாக இருந்தன.

### 1994 ருவாண்டாவில் கோரம்

1994ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதியில் இருந்து 1994 ஆம் ஆண்டு ஜுலை 15 ஆம் திகதி வரையில் 800,0000 இற்கும் மேற்பட்ட டூட்ஸி (Tutsi) சிறுபான்மை இன மக்களை, ஹுட்டு (u;utu) பெரும்பான்மையினம் கொன்றொழித்திருந்தது என்பதை உலகறியும்.

ருவாண்டாவில் தற்போது எவருமே இனம் பற்றி பேச சட்ட ரீதியாக தடை விதிக்கப்பட்டுள்ளது. இனம் பற்றி பேசினால் அது நிஜமான நல்லிணக்கம் உருவாவதற்கு தடையாகவே இருப்பதாக ருவாண்டா அரசு வாதிடுகிறது.

நீண்ட கால வறுமையின் பிடியிலிருந்து ருவாண்டா நாடு வேகமாக வெளிவந்துள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களில் ருவாண்டாவின் பொருளாதாரம் சராசரியாக ஒன்பது வீதம் என்ற அளவில் வளர்ந்துள்ளது. இது சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கு நிகரான ஒரு வளர்ச்சி ஆகும்.

அத்துடன் 1994களில் இனப்படுகொலையில் ஈடுபட்ட குற்றவாளிகள் மீதான சட்ட நடவடிக்கை என்று எடுத்துக் கொண்டால், இருபது லட்சம் பேருக்கு எதிராக உள்ளூர் நீதிமன்றங்களிலும், கொலைவெறிக் கும்பல்களின் தலைவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்கள் மீது அயல்நாடு தான்ஸானியாவிலும் வழக்கு விசாரணை நடந்துள்ளது.

### முள்ளிவாய்க்கால் மானுடப் பேரவலம்

ருவாண்டாவில் 1994இல் நிகழ்ந்த படுகொலைகளைப் போல 2009இல் முள்ளிவாய்க்காலில் பாரிய மானுடப் பேரவலம் நிகழ்ந்தது. முள்ளிவாய்க்கால் அதுவொரு காலப் பெருந்துயரம் என்றே வரலாற்றில் பதியப்படும்.

கொத்துக் கொத்தாய் கொன்றழிக்கப்பட்ட தமிழ் மக்களின் குருதி படிந்து சிவந்த நிலமே முள்ளிவாய்க்கால். பல ஆண்டுகளாக தம் இருப்புக்காய் இனத்தின் விடுதலைக்காய் போராடிய ஒரு இனக்கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் கொத்துக் குண்டுகளுக்கும் எறிகணைகளுக்கும் இரையாக்கப்பட்ட 2009 மே 18 நாளாகும்.

முள்ளிவாய்க்கால் மண்ணும் மே 18 ஆம் நாளில் ஈழத்தமிழர் வாழ்வில் இருந்து மறக்கவும் மன்னிக்கவும் முடியாத ஒன்றாய் இதனாலேயே தன்னை வரலாற்றில் நிலைநிறுத்திக் கொண்டது.

### இன அழிப்பின் முப்பதாவது ஆண்டு

கொடூரமான ருவாண்டா இனவழிப்பின் முப்பதாவது ஆண்டு நினைவு தற்போது அனுஷ்டிக்கப்படுகிறது. 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதியில் இருந்து 1994ஆம் ஆண்டு ஜுலை 15 ஆம் திகதி வரையில் 800,0000 இற்கும் மேற்பட்ட டூட்ஸி ( Tutsi) இன மக்களை ஹுட்டு (u;utu) பெரும்பான்மையினம் கொன்றொழித்திருந்தது.

ருவாண்டா இன அழிப்பு நடந்து கொண்டிருந்த

தொடர்ச்சி▼

# ஐ.நாவும் சர்வதேசமும் தடுக்க தவறிய ருவாண்டா - தமிழ் இனப்படுகொலை!



தொடர்ச்சி▲

சமயத்தில், இந்த இன அழிப்பை சர்வதேச சமூகமானது குறிப்பாக பலம் வாய்ந்த சர்வதேச சக்திகள் கவனத்தில் எடுக்கவில்லை. மேலும், படுகொலை இடம்பெற்றுக் கொண்டிருக்கையில் நடைபெற்றுக் கொண்டிருப்பது இனவழிப்பென ஏற்றுக் கொள்ள சர்வதேச சக்திகள் மறுத்திருந்தன.

நீண்ட காலத்துக்குப் பின்னரே ருவாண்டாவில் நடைபெற்றுக் கொண்டிருப்பது இனவழிப்பு நடவடிக்கை என ஐ.நா. குறிப்பிட்டிருந்த போதும் இந்த நடவடிக்கைகள் இனவழிப்புக் குற்றத்தில் உள்ளடங்குபவை என கூறத் தயாராக இருக்கவில்லை.

### பழங்குடியின ருவாண்டா

ருவாண்டா 26 ஆயிரம் சதுர கிலோ மீற்றர்கள் பரப்பளவு கொண்ட நாடாகும். இதன் மக்கள் பல்வேறு பழங்குடிக் குழுக்களைச் சார்ந்தவர்கள். ஆதியில் வந்தவர்கள் 'ட்வா' என்றும் , பின்னர் வந்தவர்கள் இன்று பெரும்பான்மை மக்கள் என அறியப்படும் ஹூட்டு பிரிவைச் சார்ந்தவர்கள்.

1700களில் எட்டு அரசுகளாக அங்கள உருவாகின. அதில் ஓர் அரசான டூட்ஸி நயிகின்யாவின் ஆட்சியில் தனிப் பெரும் அரசாக உருவெடுத்தது. அதன் முக்கிய மன்னனான கிகேலி ர்வாபுகிரி (Kigeli Rwabugiri) பல நிர்வாகச் சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தார்.

டூட்ஸி மக்கள் சமூகத்தின் மேற்படியில் அமர்த்தப்பட்டனர். ஹூட்டுக்கள் டூட்ஸி குழுத் தலைவர்களுக்கு வேலை செய்தனர்.

அப்போதிருந்து டூட்ஸிக்களுக்கும், ஹூட்டுகளுக்கும், சமூகப் பொருளாதார, அரசதிகாரப் பிரிவினைகள் ஆரம்பமாகின. அதன்பின் 1884 பெர்லின் மாநாட்டின் வழியாக, ருவாண்டா ஜேர்மனிக்கு அளிக்கப்பட்டது. ஜேர்மனி, உள்ளூர் அரசர் வழியாக ருவாண்டாவை ஆண்டுவந்தது.

### பெல்ஜிய ஆதிக்கத்தில் ருவாண்டா!

முதலாம் உலகப் போருக்குப் பின், ருவாண்டா பெல்ஜியத்தின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. ஜெர்மனியைப் போல் இல்லாமல், பெல்ஜியம் நேரடியான நிர்வாகத்தில் ஈடுபட்டது. ருவாண்டாவை நவீனப்படுத்தும் முயற்சிகள் ஆரம்பமாகின. அதில் ஓர் அங்கமாக, நிலச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு, நிலம் தனியார்மயம் ஆக்கப்பட்டது.

இந்தச் சீர்திருத்தத்தில், பொருளாதாரத்தின் மேற்படியில் இருந்த டூட்ஸிகள் பயனுற்றார்கள்.

ஹூட்டுக்கள் தம் நிலங்களை குறைந்த இழப்பீட்டுத் தொகைக்கு இழந்து, டூட்ஸிகளின் கீழ் நிலமற்ற வேளாண் கூலிகள் ஆனார்கள். பெல்ஜியம் செய்த சீர்திருத்தம்தான் ஒரு பேரழிவை அறிவியல் பூர்வமாகச் செய்ய உதவியாக இருந்தது. அதுவே மக்களை ஹூட்டு, டூட்ஸி, ட்வா மற்றும் குடியேறிகள் எனப் பிரித்து அடையாள அட்டை கொடுத்தார்கள்.

மக்கள் பிறப்பின் அடிப்படையில் டூட்ஸி, ஹூட்டு, ட்வா எனப் பிரிக்கப்பட்டார்கள். அதற்கு முன்பு, ஒரு பணம் படைத்த ஹூட்டு, தன்னை டூட்ஸி என மாற்றிக்கொள்ளும் வாய்ப்பு இருந்தது. இதுபோன்ற வழிகள் அடையாள அட்டைக்குப் பின்பு நிரந்தரமாக அடைக்கப்பட்டன.

### 1962 இல் சுதந்திரம்

பின்னர், பெல்ஜியம் ஆட்சிக் காலத்தில் கத்தோலிக்க சபை ருவாண்டாவில் பிரபலமானது. இந்தச் சபை, மெல்ல மெல்ல ஹூட்டுக்களின் தரப்புக்காகப் பேசத் தொடங்கியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு, ஹூட்டுக்களின் மேம்பாடு பற்றிய குரல்கள் வலுக்கத்துவங்கின.

1957இல், ஹூட்டு கோட்பாடு என்னும் முதல் ஆவணம் வெளியாயிற்று. இது புள்ளியியல் அடிப்படையில், அதிகாரம் டூட்ஸிகளிடம் இருந்து, ஹூட்டுகளுக்கு மாற வேண்டும் எனக் கோரியது.

1959இல் அடுத்த திருப்புமுனை. டொமினிக் போனியுமுட்வா (Domnique Mbonyumutwa) என்னும் ஹூட்டு தலைவர், தலைநகர் கிகாலியில் தாக்கப்பட்டார். அவர் கொல்லப்பட்டார் என்ற தவறான தகவல் பரவ, ஹூட்டுக்கள், டூட்ஸிகளைக் கொல்லத் தொடங்கினர்.

டூட்ஸிகளும் பதில் தாக்குதல்களைத் தொடங்கினர். ருவாண்டப் புரட்சி என்னும் இந்தத் தகராறு தொடங்கியது. இந்தக் காலகட்டத்தில், பெல்ஜியர்கள், பெரும்பான்மை ஹூட்டுகளுக்கு ஆதரவாகச் செயல்படத் தொடங்கினர். 1960இல், டூட்ஸித் தலைவர்கள் மாற்றப்பட்டு, ஹூட்டுக்கள் அந்த இடங்களில் நிரப்பப்பட்டு, தேர்தல் நடத்தப்பட்டது.

இதில், பெருவாரியாக ஹூட்டுக்கள் வென்று ஆட்சியமைத்தனர். 1962இல் ருவாண்டா, ஹூட்டுக்களின் தலைமையில் சுதந்திரம் பெற்றது.

### ருவாண்டா இனப்படுகொலை

1959 இல் ருவாண்டாவின் டூட்ஸி மன்னராட்சி முறையை ஒழித்துவிட்டு ஹூட்டுக்கள் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தனர். டூட்ஸி இனத்தார் உகாண்

தொடர்ச்சி▼

# ஐ.நாவும் சர்வதேசமும் தடுக்க தவறிய ருவாண்டா – தமிழ் இனப்படுகொலை!

**தொடர்ச்சி▲**

டாவுக்கும் பிற அண்டை நாடுகளுக்கும் வெளியேறினர். அவர்கள் ஆர் பி எஃப் அதாவது ருவாண்டா தேசப்பற்று முன்னணி என்ற கிளர்ச்சிக் குழு ஒன்றை அமைத்து ருவாண்டாவுடன் சண்டையிட்டு வந்தனர்.

1990 இல் அந்த நாட்டின் மீது படையெடுத்தனர். 1993 இல் ருவாண்டாவுக்கும் இவர்களுக்கிடையே சமாதான உடன்படிக்கை ஒன்று எட்டப்பட்டிருந்தது. 1994 ஏப்ரல் 6 இல் ருவாண்டாவின் அதிபரான ஹுட்டு இனத்தைச் சேர்ந்த ஹப்யாரிமனா சென்ற விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. ஹுட்டு கடும்போக்காளர்கள், டூட்ஸி இனத்தாரை ஒட்டுமொத்தமாக அழித்துவிட வேண்டும் எனத் திட்டமிட்டு கொலைவெறியாட்டத்தில் இறங்கினர்.

### திட்டமிட்ட இன வெறியாட்டம்

ருவாண்டா அரசுக்கு எதிரானவர்கள் யார் யார் என்று கவனமாக அடையாளம் காணப்பட்டு அவர்கள் எல்லாம் திட்டமிட்டு குடும்பத்தோடு கொன்று குவிக்கப்பட்டனர். டூட்ஸி இனத்தவரை அவரது அயல் வீட்டில் வாழ்ந்த ஹுட்டு இனத்தவரே கொன்ற அவலமும், டூட்ஸி மனைவியை அவருடைய ஹுட்டு கணவனே கொன்றது போன்ற கொடூரங்களும் அப்போது அரங்கேறின.

கொலைகளைத் தாண்டி டூட்ஸி இனப் பெண்கள் ஆயிரக் கணக்கானோர், பிடித்துச் செல்லப்பட்டு பாலியல் அடிமைகளாகவும் நடத்தப்பட்டனர். திட்டமிட்டு ஒருங்கிணைக்கப்பட்டு கொலைகள் அரங்கேறின.




1994 ஆம் ஆண்டு ஏப்ரல் காலகட்டத்தில் ருவாண்டாவில் எட்டு லட்சம் பேர் கொன்று குவிக்கப்பட்டனர். இறந்தவர்கள் பெரும்பான்மையாக டூட்ஸி இனத்தவர். கொலை வெறியாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பெரும்பான்மையாக ஹுட்டு இனத்தவர் ஆவார்கள்.

ருவாண்டாவின் அப்போதைய சனத்தொகையில் 85 சதவீதம் பேர் ஹுட்டு இனத்தார் என்றாலும், அங்கு சிறுபான்மையாக வாழ்ந்துவந்த டூட்ஸி இனத்தாரின் கை வணிகத்திலும், பொருளாதாரத்திலும் மேலோங்கியிருந்தது என்பது உண்மையே.

### ருவண்டா தேசிய முண்ணனி

படுகொலையை இனவழிப்பென சர்வதேச சக்திகள் எற்க தயங்குவதற்கு காரணம் நடைபெற்றது இனப்படுகொலையென அங்கீகரித்தால் அதனைத் தடுக்க வேண்டிய சட்டக் கடப்பாடு இருப்பதே ஆகும். அந் நேரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படையின் தலைவராகவிருந்த கோபி அனான் (Kofi Annan) ருவாண்டா இனப்படுகொலையை தடுக்கத் தவறியமைக்குக் காரணம் அதனைப்பற்றி மேற்குலக நாடுகள் அறியாமல் இருந்தது என்பதல்ல, மாறாக மேற்குல நாடுகளின் அரசியல் நிலைப்பாடுகளே காரணமாகும்.

### ஐ.நா. கொலைகளை தடுக்கவில்லை…

அந்த நேரத்தில் ஐநா அமைதிகாப்பு படைகளும் மற்றும் பெல்ஜியம் படைகளும் அவ்விடத்தில் இருந்தாலும், இந்த கொலைகளை தடுக்க வேண்டிய உத்தரவு அவர்களுக்கு சென்றிருக்கவில்லை.

ஹுட்டு அரசாங்கத்துக்கு நெருக்கமாக இருந்த பிரஞ்சு அரசாங்கம் பாதுகாப்பு வலயம் ஒன்றை அமைத்தாலும் அதுவும் கொலைகளைத் தடுக்க போதிய முயற்சி எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரான்சும் கூட கொலைகளில் சம்பந்தப்பட்டிருந்ததாக ருவாண்டாவின் தற்போதைய அதிபர் குற்றம்சாட்டுகிறார். ஆனால் பிரான்ஸ் அரசு அதனை மறுக்கிறது. பின்னர் டூட்ஸி இன கிளர்ட்ச்சிக் குழுவினர் வலுவாக அணிதிரண்டு ஹுட்டுக்களை ருவாண்டாவை விட்டு விரட்டி ஆட்சியைக் கைப்பற்றினர்.

இனக் கொலை வெறியாட்டம் முடிந்து அமைதி திரும்பிய பின்னர் ருவாண்டாவில் ஆர் பி எஃப் கிளர்ச்சிப் படையின் தலைவர் பால் கிகாமே அதிபராக வந்து, பொருளாதார ரீதியில் நாட்டை முன்னேற்றியுள்ளார்.

### கொத்துக் கொத்தாய் கொல்லப்பட்ட தமிழர்

2008 இன் இறுதிப் பகுதியிலும், 2009 ஆரம்பத்திலும், ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை அரச படைத்துத்துறையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் போர் நடைபெற்றது.

மேற்குலகின் உதவியுடன் அதி நவீன ஆயுதங்கள் இரக்கமே இல்லாது முள்ளிவாய்க்கால் மண் மீது வீசப்பட்டது. அண்டை நாடு முதல் ஐ.நா. சபை வரை வேடிக்கை பார்த்து நிற்க பேரினவாத அரசின் கொடூர வன்செயலால் பிஞ்சுக் குழந்தை முதல் வயதானவர்கள் வரை குரல்வளை நசிக்கப்பட்டும் உயிரோடு புதைக்கப்பட்டும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் கொல்லப்பட்டிருந்தனர்.

தமிழீழ தனிநாடு விடுதலை கோரி 1956 இலிருந்து அகிம்சைப் போராட்டங்களிலும், பின்னர் 2009 வரை ஆயுதப் போராட்டத்தின் இறுதிக்கட்டம் முள்ளிவாய்க்காலில் பாரிய மனிதப் பேரழிவுடன் தமிழர்களின் ஈழப்போராட்டம் மௌனிக்கப்பட்டது.

இத்தனைக்கும் தமிழ் பேசும் மக்கள் கேட்டது அவர்கள் நிலம் அவர்களுக்கு வேண்டும் என்பதேயாகும். இதை ஏற்க மறுத்த பேரினவாத அரசாங்கம் தமிழ் மக்களை மேற்குலகின் துணையோடு இரக்கமே இல்லாமல் முள்ளிவாய்க்காலில் அழித்தொழித்தது.

அன்றைய ருவாண்டா படுகொலையும், பின்னர் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த கோரங்களுக்கும் சர்வதேசம் பொறுப்புக் கூற தவறியுள்ளது.



# பாலின அடிப்படையிலான வன்முறை பற்றிய கண்காட்சி!





(பழுவூரான்)

பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை பற்றிய உண்மைச் சம்பவங்கள் சித்தரிக்கப்பட்ட வரைபடங்களுடன் கூடிய கண்காட்சி திங்கட்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையில் கனடா அரசு மற்றும் நோர்வே தூதரகத்தின் நிதி உதவியில் பால்நிலை சமத்துவம், பாலின மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை ஆகியவற்றை காட்சி படுத்தும் கண்காட்சி நாடளாவிய ரீதியில் 7 மாவட்டங்களில் நடத்தப்பட்ட நிலையில் 7 ஆவது மாவட்டமும் இறுதி மாவட்டமாக மட்டக்களப்பில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

ஆரம்ப வைபவத்தில் இலங்கைக்கான தூதுவர் யூலி சங், யு.என்.டி.பி. வதிவிட பிரதிநிதி அசுசா குபோட்டா, மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன், முதலமைச்சின் செயலாளரும், உள்ளூராட்சி, மாகாண ஆணையாளருமான எஸ். மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உள்ளூராட்சி, கிழக்கு மாகாண ஆணையாளரும் முதலமைச்சின், செயலாளருமான மணிவண்ணன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். பிரகாஷ், யு.என்.டி.பி. நிறுவன மட்டக்களப்பு மற்றும் கொழும்பு உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக உதவியாளர்கள், கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் பால்நிலை மற்றும் பெண்கள் அபிவிருத்தி தொடர்பான உள்ளூர் நிறுவனப் பிரதிநிதிகள், சிறுதொழில் முயற்சியாளர்கள், கிழக்கு மாகாண பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# நுவரெலியாவில் வசந்தகால விழாவை சிறப்பிக்கும் வகையில் கிரிக்கெட் போட்டி



(ஆ.ரமேஸ்)

நுவரெலியாவில் இடம்பெற்று வரும் ஏப்ரல் வசந்தகால விழாவைச் சிறப்பிக்கும் வகையில் “battle of little England” கிண்ணத்துக்கான மாபெரும் கடினப்பந்து கிரிக்கெட் போட்டி இடம்பெறவுள்ளது.

இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை பலப்படுத்தும் வகையில் எதிர்வரும் 28. 29 ஆம் திகதிகளில் நுவரெலியா மாநகர சபை பொது மைதானத்தில் இந்த மாபெரும் கிரிக்கெட் போட்டியை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு ஒன்றை நுவரெலியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரி, மற்றும் காமினி தேசிய பாடசாலையின் அதிபர்கள் தலைமையில் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் அதிசய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த ஊடக சந்திப்பில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்களும் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த நுவரெலியா பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரி அதிபர் எம். ரவிச்சந்திரன்,

நுவரெலியாவில் கடந்த 2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையை பலப்படுத்தும் “battle of little England” கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டி பாரிய வெற்றியை தந்திருந்தது.

அதேபோல் இந்த ஆண்டுக்கான போட்டியும் வெகு சிறப்பாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆகையால் இப்போட்டி சிறப்புறப் பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் தற்போதைய மாணவர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் ஒத்துழைப்பு தந்து உதவுமாறு கெட்டுக் கொள்கிறோம்.

அதேவேளை இந்த கிரிக்கெட் போட்டி நிகழ்வு தொடர்பாக எதிர்வரும் 27 ஆம் திகதி வாகன பேரணி ஒன்றும் நுவரெலியா நகரில் நடத்துவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.– என்றார்.

# தமிழகத்தில் வெயிலின் தாக்கம் உச்சம் வெப்ப அலை வீசும் எனவும் எச்சரிக்கை

## நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை மக்களை வெளியே வர வேண்டாம் என அறிவுரை

கோவை,ஏப்.24

தமிழகத்தில் வெயிலின் தாக்கம் இந்த ஆண்டு கடுமையாக உள்ளது. இயல்பை விட 4, 5 டிகிரி செல்சியஸ் வெயில் அதிகமாக இருப்பதால் மக்கள் அவதிப்படுகிறார்கள். வட உள் மாவட்டங் களில் வெப்ப அலை தாக்கி வருகிறது.

ஈரோடு, சேலம், தர்மபுரி, வேலூர், திருச்சி, கரூர், மதுரை, திருப்பத்தூர், கோவை, நாமக்கல் மாவட் டங்களில் 40 டிகிரி செல்சியஸ்க்கு மேல் வெயில் சுட்டெரித்தது.

அடுத்த 4 நாள்களுக்கு தமிழகத்தில் ஒருசில இடங்களில் இயல்பை விட 3 முதல் 5 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கும் என்றும் தமிழக உள் மாவட்டங்களில் 39 முதல் 42 டிகிரி செல்சியஸ் வரை இருக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பொது மக்கள் வெளியே வர வேண்டாம் என மாவட் ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளி யிட் டுள்ள அறிக்கையில் –



தமிழ்நாட்டில் கடந்த சில நாள்களாக பல்வேறு மாவட்டங்களில் வெப்பம் அதிகரித்து காணப்படும் நிலையில், இந்திய வானிலை ஆய்வு மையம் தனது 23.4.2024 நாளிட்ட அறிவிக் கையில், தமிழ்நாட்டின் வட உள் மாவட்டமான கோயம்புத்தூர் மாவட் டத்தில் வரும் நாள்களில் ஓரிரு இடங்க ளில் வெப்ப அலை வீசக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் போதுமான அளவு தண்ணீர் அருந்துமாறும், அத்தியாவசிய தேவையின்றி வெளியில் செல்வதை தவிர்க்குமாறும், குறிப்பாக நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை வெளியில் செல்வதை தவிர்த்திடுமாறும், வெயிலின் தாக்கத் தால் உடல்நலக் குறைவு ஏற்படும் நிலையில், உடனடியாக மருத்துவரை அணுகுமாறும் இதன் மூலம் தெரிவித் துக் கொள்ளப்படுகிறது. – என்று உள்ளது.

# நாட்டிற்காக எனது தாயார் தாலியை அர்ப்பணித்தார்!

## இப்படிக் கூறுகின்றார் பிரியங்கா காந்தி

பெங்களூரு,ஏப்.24

பிரதமர் மோடிக்கு தேர்தலில் மகளிர் பதிலடி தருவார்கள் என்று பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம், பெங்களூருவில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் பொதுச்செயலார் பிரியங்கா காந்தி பங்கேற்றார்.

அப்போது அவர் பேசுகையில் –

“கடந்த 2 நாட்களாக காங்கிரஸ் கட்சி உங்கள் தாலியையும், தங்கத் தையும் பறிக்க விரும்புவதாக கூறப்படு கிறது. நாடு 70 ஆண்டுகளாக சுதந்திர மாக இருந்து வருகிறது.

55 ஆண்டுகளாக காங்கிரஸ் அரசு உள்ளது. ‘தாலி’ என்ற உங்கள் தங் கத்தை யாராவது பறித்தார்களா? போர் நடந்து கொண்டிருந்த போது, இந்திரா காந்தி தனது தங்கத்தை நாட்டுக்கு வழங்கினார். என் தாயும் அவர் தாலியை இந்த நாட்டிற்காக அர்ப்பணித் தார். பிரதமர் இதனை எதையும் அறி யாமல் பேசுகிறார். பெண்களின் உணர் வுகள் மோடிக்கு தெரியாது. பணமதிப்



பிழப்பு காரணமாக பல்வேறு பெண்க ளின் தாலிகள் அடகு கடைகளில் இருந்தன. பல பெண்களின் திருமணங் கள் நகைகள் இல்லாததால் நின்றன. அப்போது பிரதமர் எங்கு சென்றார்? பிரதமர் மோடி கொச்சையான அரசி யலை பேசி வருகிறார், மோடிக்கு தேர்த லில் பதிலடியை மகளிர் தருவார்கள்” என்றார்.

இதற்கு முன்னதாக, ராஜஸ்தான் மாநிலம் பன்ஸ்வாராவில் கடந்த 21 ஆம் தேதி அன்று நடந்த தேர்தல் பிரசாரத்தில் பேசிய பிரதமர் மோடி, “காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் அனை வரின் சொத்துகளும் கணக்கெடுக்கப் படும். தாய்மார்கள், சகோதரிகளுக்கு சொந்தமான தங்கத்தை கணக்கிட்டு பின்னர் அதை மறுவிநியோகம் செய் யும் என காங்கிரஸ் தேர்தல் அறிக் கையில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் உங்கள் தாலியை கூட விட மாட்டார்கள்” என்றார்.

பிரதமரின் இந்த பேச்சு தவறானது என்றும், காங்கிரஸ் தேர்தல் அறிக்கை யில் இப்படி ஒரு தகவல் தெரிவிக்கப் படவில்லை என்றும் காங்கிரஸ் கூறியுள்ளது.

இந்நிலையில், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் பெண்களின் தாலியை கூட பறித்து விடுவார்கள் என்ற விமர்சனத் துக்கு பதிலடியாக பிரியங்கா காந்தி, தனது தாயின் தாலி இந்த நாட்டுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என கூறியுள்ளார்.

# அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் தீவிரமடையும் மாணவர் போராட்டம்!

நியூயோர்க்,ஏப்.24

இஸ்ரேல் – ஹமாஸ் போரில் காசாவில் உள்ள அப்பாவி பாலஸ்தீனர்கள் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். காசாவில் இஸ்ரேல் தாக்குதலை நிறுத்தக் கோரி அமெரிக்காவில் பாலஸ்தீன ஆதரவாளர்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். இந்த போராட்டத்தின் நீட்சியாக அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் போராட்டம் வெடித்துள்ளது.




இஸ்ரேல்-ஹமாஸ் போர், காசாவில் நிலவும் மனிதாபிமான நெருக்கடி ஆகியவற்றால் ஆத்திரமடைந்த மாணவர்கள், பல்கலைக்கழக வளாகங்களில் ஒன்றுதிரண்டு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நேற்று நடந்த போராட்டங்களில், பல்கலைக்கழக நிர்வாகிகள் மற்றும் பொலிஸாருடன் மாணவர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையால் பதற்றம் ஏற்பட்டது. இதனால் வகுப்பறைகள் மூடப்பட்டன. போராட்டத்தில் ஈடுபட்ட ஏராளமான மாணவர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

பரவி வரும் போராட்டத்தின் மையப் பகுதியாக இருக்கும் கொலம்பியா பல்கலைக்கழகத்திலும் போராட்டம் தீவிரமாக நடைபெற்றது. இஸ்ரேலிய இன வேற்றுமை, இனப்படுகொலை மற்றும் பாலஸ்தீன ஆக்கிரமிப்பினால் லாபம் ஈட்டும் நிறுவனங்களில் இருந்து பல்கலைக்கழகம் விலக வேண்டும் என்று போராட்ட ஒருங்கிணைப்பாளர்கள் வலியுறுத்தினர்.

இந்த போராட்டம் காரணமாக பல்கலைக்கழக வளாகத்தில் பாதுகாப்பு இல்லை என்று இஸ்ரேல் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். மிரட்டல் மற்றும் வெறுப்பு பேச்சுகளை பல்கலைக்கழக வளாகங்கள் ஊக்குவிக்கின்றன எனவும் அவர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இதுபற்றி கொலம்பியாவின் பொது விவகாரங்கள் துறை துணை தலைவர் பென் சாங் கூறுகையில், “மாணவர்கள் போராட்டம் நடத்த உரிமை இருக்கிறது. ஆனால் அவர்கள் கல்வி நிறுவன வளாகத்தில் இயல்பு நிலையை சீர்குலைக்கவோ அல்லது மற்றவர்களை துன்புறுத்தவோ மிரட்டவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள்” என்றார்.

இதற்கிடையில், யூத விரோத நிகழ்வுகள் நடப்பதாகக் கூறும் குற்றச்சாட்டுகளை காசா ஒற்றுமை முகாமில் உள்ள பல யூத மாணவர்கள் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் மறுத்துள்ளனர். பாலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக தாங்கள் இருக்கின்றனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர். கொலம்பியா பல்கலைக்கழகத்தில் உள்ள யூத மாணவர்கள் பாதுகாப்பாக உணரவில்லை என்றும், வகுப்பறையை விட்டு மாணவர்களை வெளியேற்றும் அளவுக்கு இது ஆபத்தானது என்றும் குடியரசு கட்சியைச் சேர்ந்த சபாநாயகர் மைக் ஜான்சன் கூறினார்.

# துபாயின் சர்வதேச விமான நிலையம் கனமழைப் பாதிப்பிலிருந்து மீண்டது

துபாய்,ஏப்.24

கனமழை பாதிப்பில் இருந்து துபாய் சர்வதேச விமான நிலையம் முழுமையாக மீண்டுள்ளது. தற்போது அங்கு சீரமைப்பு பணிகள் நிறைவடைந்து விமான போக்குவரத்து இயல்பு நிலைக்கு திரும்பியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




இது குறித்து துபாய் சர்வதேச விமான நிலையத்தின் தலைமை செயல் அதிகாரி பால் கிரிப்பித்ஸ் நிருபர்களிடம் கூறியதாவது:-

துபாயில் கடந்த 75 ஆண்டுகளில் இல்லாத அளவு கனமழை கொட்டித்தீர்த்தது. இதன் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் விமான போக்குவரத்துக்கு பெரும் இடையூறு ஏற்பட்டது. இதில் பல்வேறு விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. சில விமானங்கள் வேறு பகுதிக்கு திருப்பி விடப்பட்டன.

பாதிக்கப்பட்ட துபாய் விமான நிலையத்தில் தங்கியிருந்த பயணிகளுக்கு 75 ஆயிரம் உணவு பொட்டலங்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்களின் தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இடையூறு ஏற்பட்டு மீண்டும் விமான நிலையத்தை இயங்க வைப்பது சாதாரண சாதனையல்ல. ஏனென்றால் மழைவெள்ளம் காரணமாக 2 ஆயிரத்து 155 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன. மேலும் 115 விமானங்கள் வேறு பகுதிகளுக்கு திருப்பி விடப்பட்டன.

மீண்டும் விமான போக்குவரத்துக்கான கால அட்டவணையை சரி செய்வதற்கும், இடையூறு ஏற்பட்டதால் பாதிக்கப்பட்ட அனைவரையும் கவனித்துக்கொள்ளவும் நாங்கள் விமான நிறுவனங்கள் மற்றும் சேவை வழங்குனர்களிடம் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டி இருந்தது.

தற்போது மழைவெள்ளம் முற்றிலும் அகற்றப்பட்டு, விமான போக்குவரத்து கால அட்டவணை மீண்டும் சரியான நேரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது.துபாய் சர்வதேச விமான நிலையம் தற்போது மீண்டும் நாள் ஒன்றுக்கு 1,400 விமானங்களை இயக்கி இயல்பு நிலைக்குத் திரும்பி உள்ளது. விமான நிலையம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் 100 சதவீதம் மழைநீர் வெளியேற்றப்பட்டுள்ளதால் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து ஆகியவை வழக்கம்போல் செயல்படுகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

கனடா முரசு

பக்கங்கள் 06

புதன்கிழமை 24/04/2024

## டொரன்டோவில் மாத வாடகை மூன்றாவது மாதமாக குறைகிறது

ஒன்ராரியா, ஏப்ரல் 24

டொரன்டோவில் மாதாந்த வாடகை தொடர்ந்து மூன்றாவது மாதமாக வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. C2





# பூர்வீகக்குடி மாணவர்களின் கல்வி நிலை குறித்து அமைச்சர் கெரி ஆனந்தசங்கரி கலந்துரையாடல்

**நோவா ஸ்கோட்சியா, ஏப்ரல் 24**

**பூர்வீகக்குடி மாணவர்களின் இரண்டாம் நிலைக்குப் பின்னரான கல்விக்கு ஆதரவளிக்கும் 2024ஆம் வரவு - செலவுத் திட்டத்தின் அம்சங்கள் குறித்து நோவா ஸ்கோட்சியாவில் பூர்வீகக்குடிகள் நலன்பேண் அமைச்சர் கெரி ஆனந்த சங்கரி கலந்துரையாடியுள்ளார்.**

அமைச்சர் ஆனந்தசங்கரி எக்காடியா பல்கலைக்கழகத்திற்கு ஏப்ரல் 23ஆம் திகதி விஜயம் செய்து இது குறித்து கலந்துரையாடியுள்ளார்.

அதிகரித்த நிதி ஒதுக்கீடின் மூலம் பூர்வீகக்குடிகளைச் சேர்ந்த ஆய்வாளர்களுக்கு அதிக நிதி கிடைப்பதுடன், மாணரவ்களுக்கு கல்விக்கான அதிக ரித்த அணுகும் வசதி கிடைக்கும் என தமது சமூக வலைத்தளத்தில் அமைச்சர் ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

# சசகெச்சுவான் மாகாண அரசு எதிர்த்தாலும் மக்களுக்கு காபன் மீள்கொடுப்பனவு கிட்டும்

## சசகெட்டூனில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ திட்டவட்டம்

சசகெச்சுவான், ஏப்ரல் 24

சசகெச்சுவான் மாகாண அரசாங்கம் எதிர்த்து வந்தாலும், மக்களுக்கு காபன் மீள்கொடுப்பனவு வழங்கப்படும் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இயற்கை வாயுவுக்கு மத்திய அரசாங்கத்திற்கான காபன் வரியைச் செலுத்துவதில்லை என இந்த வருட ஆரம்பத்தில் சசகெச்சுவான் மாகாணம் தீர்மானித்திருந்தது.

இது மத்திய அரசாங்கத்துடனான மாகாணங்களின் இணக்கப்பாட்டை மீறும் செயலாக கருதப்படுகின்றது.

எனினும், சசகெட்டூனில் உரையாற்றிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, கனடா காபன் மீள்கொடுப்பனவை சசகெச்சுவானில் உள்ள அனைவருக்கும் வழங்குவோம் என பிரதமர் ட்ரூடோ உறுதியளித்துள்ளார்.

மத்திய அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கான வழி கனடிய வருமான வரி நிறுவனத்திற்கு தெரியும் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.



# உலோக விலைக் கையாளுகை குறித்து ஃபைவ் ஐஸ் கூட்டணி நாடுகள் ஆய்வு!

## அமெ., பிரி., ஆஸி, கனடா, நியூஸிலாந்து கலந்தாலோசனை

ஒன்ராரியோ, ஏப்ரல் 24

கனடாவும் அதன் ஃபைவ் ஐஸ் கூட்டணி நாடுகளும் முக்கியமான உலோகங்களின் விலைக் கையாளுதலைச் சமாளிப்பதற்கான தீர்வுகளை ஆராய்ந்து வருவதாக கனடாவின் நிதி அமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தெரிவித்துள்ளார். அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகள் ஃபைவ் ஐஸ் வலையமைப்புக் கூட்டணி என அழைக்கப்படுகின்றன.

இந்த நாடுகளின் நிதி அமைச்சர்கள் கடந்த வியாழனன்று வொஷிங்டனில் சர்வதேச நாணய நிதியத்தின் வசந்த கால அமர்வுக்காக சந்தித்திருந்தனர்.

சீனா மற்றும் இந்தோனேஷியா போன்ற பெரிய உற்பத்தி செய்யும் நாடுகளால் சர்வதேச சந்தையில் முக்கியமான தாதுப்பொருள்கள் கொட்டப்படுவதை எதிர்த்துப் போராடுவதற்கு



இந்த நாடுகள் தங்கள் முக்கியமான தாதுக்கள் விநியோகச் சங்கிலியை எவ்வாறு மாற்றுவது என்பது குறித்து விவாதித்தன என ஃப்ரீலேண்ட் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் மற்றும் பொருளாதார கூட்டாளிகளாகக் கருதப்படும் நாடுகளில் விநியோகச்சங்கிலிவலையமைப்புக்கள் கவனம் செலுத்தும் ஒரு வர்த்தக நடைமுறையாக 'நட்புக் கூட்டல்' என்று உலகப் பொருளாதார மன்றம் இதனை விவரிக்கிறது.

# இணையத் தீங்குகள் சட்டத்தை இடைநிறுத்திப் பேண தீர்மானம்

## பிரிட்டிஷ் கொலம்பியா அரசு முடிவு

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 24

பேஸ்புக், டிக்டொக் மற்றும் ஸ்னெப்செட்டுடான இணக்கப்பாட்டினைத் தொடர்ந்து இணையத் தீங்குகள் சட்டத்தினை தற்காலிகமாக ஒத்திவைப்பதற்கு பிரிட்டிஷ் கொலம்பியா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சமூக ஊடக நிறுவனங்களுடன் இணைந்து நல்லெண்ணத்துடன் இணையத்தில் மக்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் தீர்வைக் காண்பதற்கு இணக்கம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், உத்தேச சட்டமூலம் செயலில் இருக்கும் எனவும், தேவையான சந்தர்ப்பத்தில் சட்டமாகப் பயன்படுத்தப்படும் எனவும் பிரிட்டிஷ் கொலம்பியாவின் முதல்வர் டேவிட் எபி தெரிவித்துள்ளார்.

முதல்வர் மற்றும் சமூக ஊடக நிறுவனங்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில், இணையத் தீங்குகளில்



இருந்து மக்களைப் பாதுகாப்பதனை நோக்கிய நடவடிக்கைகளை கலந்துரையாடும் இணையப் பாதுகாப்பு செயற்பாட்டு மேசை என்ற அலகு ஒன்றினை உருவாக்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



## டொரன்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரென்டல்ஸ் கனடா எனப்படும் இணையத்தளத்தின் அறிக்கையிலேயே இந்த விடயம் வெளியிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்திற்கான அறிக்கையின் படி, டொரன்டோ வாடகை அளவானது ஏப்ரல் மாதத்தில் 0.7 சதவீதத்தால் குறைந்து, மாத சராசரி 2,782 டொலர்களாக பதிவாகியுள்ளது.

2023ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் முதல் வாடகையில் சிறிது சிறிதாக வீழ்ச்சி பதிவாகி வருகின்றது.

எவ்வாறாயினும், கனடாவில் வாழ்வதற்கு அதிக செலவாகும் நகரங்களின் பட்டியலில் டொரன்டோ தொடர்ந்தும் முன்னிலையில் இருக்கின்றது.

பிரட்டிஷ் கொலம்பியாவின் பேர்ன்பே மற்றும் வென்கூவர் நகரங்களுக்கு அடுத்ததாக மூன்றாவது இடத்தில் டொரன்டோ உள்ளது.

# ஒன்றாரியோ லிபரல் கட்சி 15 வருடங்களாக ஸ்கார்பரோ நகருக்கு எதுவும் செய்யவில்லை

## மாகாண இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் குற்றச்சாட்டு

ஒன்ராரியோ,ஏப்ரல் 24

கடந்த 15 வருடங்களில் ஒன்ராரியோ லிபரல் கட்சி ஸ்கார்பரோ நகரிற்காக எதுவுமே செய்யவில்லை என கன்சர்வேட்டிவ் கட்சியின் மாகாண உறுப்பினரும், இணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் தெரிவித்துள்ளார்.

மாகாண அவையில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாகாண லிபரல் அரசாங்கமானது புதிய வைத்தியசாலைகளை அமைக்கவில்லை எனவும், புதிய மருத்துவ கல்லூரிகளை அமைக்கவில்லை எனவும், புதிய சுரங்கப்பாதைகளை அமைக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதல்வர் டக் போர்ட் தலைமையிலான மாகாண அரசாங்கம் ஸ்கார்பரோ மக்களுக்காக நிறைய விடயங்களைச் செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கெரி விடால் எம்.பி. திரும்ப தேர்தலில் இறங்கமாட்டார்!

ஒன்ராரியோ, ஏப்ரல் 24

கன்சர்வேட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினர் கெரி விடால் மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் தொகுதிக்கான வேட் பாளர் தெரிவுக்கு பகிரங்க வேட்புமனு கோருவதில்லை என கன்சர்வேட்டிவ் கட்சியின் தீர்மானமே இதற்கான காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் சசகெச்சுவான் தொகுதியில் விடால் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

தேர்தல் தொகுதிகளின் எல்லைகள் எதிர்பாராத வகையில் மாற்றமடைந்து வருகின்ற நிலையில், இதுவரையான அவரது தொகுதியிலிருந்து மாறுபட்ட வேறுதொகுதியே அவருக்குக் கிடைக்கும்.

இந்த நிலையில், தாம் எதிர்பார்க்காத வகையில் புதிய தேர்தல் தொகுதிக்கு பகிரங்க வேட்புமனுவின்றி, வேட்பாள



ரைத் தெரிவு செய்வதற்கு கட்சி தீர்மா னித்துள்ளமையால், அடுத்த தேர்தலில் போட்டியிடாதிருக்கப் போவதாக விடால் தெரிவித்துள்ளார்.

# மத்திய அரசின் வரவு - செலவுத் திட்டம் மக்கள் ஆதரவைப் பெறத் தவறிவிட்டது

## புதிய கருத்துக்கணிப்பில் தகவல்

ஒன்ராரியோ, ஏப்ரல் 24

மத்திய அரசாங்கத்தின் 2024ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மக்கள் வரவேற்பை பெறத் தவறியுள்ளதாக புதிய கருத்துக்கணிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

ஏப்ரல் 23ஆம் திகதி இப்சோஸ் வெளியிட்ட கருத்துக்கணிப்பில், மக்கள் மத்தியில் பின்தங்கியுள்ள ஆளும் லிபரல் கட்சியானது, வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் மக்கள் மத்தியில் ஆதரவை அதிகரிக்க தவறிவிட்டதாக தெரிவித்துள்ளது.

புதிய வரவு – செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தின் செலவிடுதல் தொடர்பான திட்டங்கள் ஆளும் கட்சியின் முன்னுள்ள பெரும் சவாலை காட்டுவதாக இப்சோஸ் கருத்துக்கணிப்பு குறிப்பிட்டுள்ளது.

அடுத்த தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு வெற்றி சென்றுவிடக் கூடாது என்பதற்கான ஆளும் கட்சியின் முயற்சியாகவே புதிய வரவு – செலவுத் திட்டம் பார்க்கப்படுவதாக கருத்துக்கணிப்பின் முடிவுகள் தெரிவிக்கின்றன.








# பாலியல் ஊக்க மருந்து வகைகள் குறித்து கனடாவில் அவசர எச்சரிக்கை அறிவிப்பு!

அனுமதியளிக்கப்படாத பாலியல் ஊக்க மருந்து வகைப் பயன்பாடு குறித்து கனடிய சுகாதார திணைக்களம் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாரிய சுகாதார கேடுகளை விளைவிக்கக்கூடிய பாலியல் ஊக்க மருந்துகள் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நோர்த் யோர்க், ஸ்காப்ரோ, ரொறன்ரோ போன்ற இடங்களில் இவ்வாறான சட்டவிரோத மருந்து வகைகள் விற்பனை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சட்டவிரோத மருந்து வகைகளை சுகாதார திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

'Rhino 7 Platinum 10000', 'Titanium 12K' மற்றும் 'Black Panther#1' போன்ற பாலியல் ஊக்க மருந்து வகைகள் மிக ஆபத்தானவை என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உயர் குருதியமுத்தம், இருதய நோய்கள், சிறுநீரக நோய்கள் போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த வகை மருந்துகளை பயன்படுத்துவது மிக ஆபத்தானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகை மருந்துகளை பயன்படுத்துவதனை உடன் நிறுத்துமாறும் மருத்துவ ஆலோசனையின் அடிப்படையில் மருந்துகளை பயன்படுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

# சூறையாடப்பட்ட 400 கிலோ தங்கக் கட்டிகளின் ஒரு பகுதி ரொறன்ரோவில்தான் உருக்கப்பட்டது

கனடா விமான நிலையத்திலிருந்து சூறையாடப்பட்ட 400 கிலோ கிராம் எடையுடைய தங்கத்தின் ஒரு பகுதி ரொறன்ரோவில் அமைந்துள்ள நகைக் கடையொன்றில் உருக்கப்பட்டுள்ளது என்ற விடயம் தற்போது புலன்விசாரணையாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது

இந்தச் சம்பவம் தொடர்பில் தமிழர் ஒருவர் உள்ளிட்ட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொத்தம் 12 பேருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்துடன் எயார் கனடா விமான சேவை நிறுவனத்தின் இரண்டு பணியாளர்களுக்கும் தொடர்பு உண்டு என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

எவ்வளவு தங்கம் இவ்வாறு நகைக் கடையில் உருக்கப்பட்டது என்பது பற்றிய துல்லியமான தகவல்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை.





# பற்றியெரிந்த 5 பெட்டிகளுடன் கனடா நகரத்தில் ஓடிய ரயில்!

கனேடிய நகரமொன்றில், பற்றியெரிந்தபடி ரயில் ஒன்று பயணிக்கும் காட்சிகள் வெளியாகி மனதை பதைபதைக்கச் செய்துள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, 10.49 மணியளவில், கனடாவின் ஒன்ராறியோவிலுள்ள லண்டனில், பற்றியெரிந் தபடி பயணித்த ரயில் ஒன்றைக் கண்டபலர் அவசர உதவியை அழைத்தனர்.என்றாலும், நீண்ட தூரம் பயணித்த பிறகே அந்த ரயில் நின்றது.

ரயில் பாதைகளில் தண்டவாளங்களுக்கிடையே பதிக்கப்படும் மரக் கட்டைகளை ஏற்றிச் சென்ற ரயில் பெட்டிகள் தீப்பற்றி எரிந்த நிலையில், அபாயத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ள பொருள்கள் இருந்த பெட்டிகளுக்கு தீ பரவாமல் தடுப்பதற்காக, ரயில் பணியாளர்கள், தீப்பற்றிய ஐந்து பெட்டிகளை கழற்றிவிட்டுள்ளனர்.

10 தீயணைப்பு வாகனங்களுடன் சுமார் 28 தீயணைப்பு வீரர்கள் தீயை அணைக்கும் முயற்சியில் இறங்கிய மையுடன், அப்பகுதியில் கடும் புகை சூழ்ந்ததால், ஜன்னல்களை மூடிக் கொண்டு வீடுகளுக்குள் பாதுகாப்பாக இருக்குமாறு மக்களைக் கேட்டுக் கொண்டனர்.

திங்கட்கிழமை 12.30 மணிக்கு, புகை முற்றிலும் விலகியபிறகே மக்கள் வெளியே வர அனுமதிக்கப்பட்டனர்.

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தின் பின்னணியில் சதி ஏதேனும் உள்ளதா என்பது தொடர்பாக அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுவருகிறார்கள்





### பீல் பிராந்திய பொலிஸ் பிரதானியான

# நிஷான் துரையப்பா இலங்கை விஜயத்தில் தேசபந்து தென்னக்கோனைச் சந்திப்பதா?

### ‘கனடாவின் நற்பெயருக்குக் களங்கம்’ என விமரிசனம்

இலங்கைத் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த கனேடிய பிராந்திய பொலிஸ் பிரதானி ஒருவர் இலங்கையின் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்ன கோனைச் சந்தித்தமை காரணமாக கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளார்.

2023ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் திகதி கனேடிய பீல் பிராந்திய பொலிஸ் பிரதானி நிஷான் துரையப்பா, கொழும்பில் உள்ள பொலிஸ் தலை மையகத்திற்கு விஜயம் செய்து மூத்த அதிகாரிகளைச் சந்தித்திருந்தார்.

பொலிஸ் சீருடையில் மூத்த அதிகாரிகளை அவர் சந்தித்த படங்களும் வெளியாகியிருந்தன.

மேலும், நிஷான் துரையப்பாவின் இலங்கை விஜயம் ரோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸாருக்கு முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கைதி ஒருவரை சித்திரவதை செய்தமை தொடர்பில் இலங்கையின் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோன் உயர் நீதிமன்றத்தினால் அந்த மாத தொடக்கத்தில் குற்றவாளி யாகக் காணப்பட்டிருந்தார்.

திருட்டுக் குற்றத்திற்காக சந்தேகத் தில் கைதான ஒருவரை கொடூரமாகச் சித்திரவதை செய்தார் என தேசபந்து தென்னக் கோனை குற்றவாளியாகக் கண்டு 2023 டிசம்பர் 14 ஆம் திகதி இலங்கையின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்நிலையில், தேசபந்து தென்னக் கோன் மற்றும் நிஷ ான் துரையப்பா ஆகிய இருவருக்கும் இடையிலான சந்திப்பை ‘கனடாவின் நற்பெயருக்குக் களங்கம்’ என இங்கிலாந்தைத் தளமா கக் கொண்ட தமிழ் கார்டியனை நடத்தும் வைத்தியர் துசியன் நந்தகுமார் குறிப் பிட்டுள்ளார்.

இதனிடையே, நிஷான் துரையப்பா வின் இலங்கை விஜயம் தனிப்பட்டது என பீல் பிராந்திய பொலிஸ் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த சந்திப்பின் போது நிஷான் துரையப்பா பீல் பிராந்திய பொலிஸ் சீருடை அணிந்திருந்தமை யைப் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கனடாவின் முதல் தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன், ஒருவர் சீருடை அணிந்தால், அந்த சீருடைக்கு உரிய அமைப்பை அவர் பிரதிநிதித்துவப்படுத்து கிறீர்கள் என்று அர்த்தம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், நிஷான் துரையப்பா தனது குடும்ப விடுமுறைக்காக அவர் பிறந்த நாட்டிற்குச் சென்றிருந்த போது, இலங்கை பொலிஸ் அதிகாரிகளின் அழைப்பை ஏற்றுக்கொண்டார் என பீல் செய்தித் தொடர்பாளர் தெரி வித்தார். இதன்போது, நிஷான் துரையப்பா, தென்னகோனை நேரடியாகச் சந்தித் தாரா என்று கேட்டபோது செய்தித் தொடர் பாளர் அதனை உறுதிப்படுத்தவில்லை என கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.







இதனிடையே, அண்மைய நீதிமன்றத் தீர்ப்பு உட்பட தேசபந்து தென்ன கோன் பற்றிய தகவல்களை முன்கூட் டியே நிஷான் துரையப்பாவுக்கு வழங்கியதாக ரோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸ் தெரிவித்துள்ளது.